


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 282 02.11.2024 பக்கங்கள்:05 editorml21@gmail.com விலை:75/-

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இணையத்தயார்



## பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பச்சைக்கொடி

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 02

## சட்டவிரோத கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மூடப்பட வேண்டும்

### சுயேட்சைக் குழு 21 கோரிக்கை

கல்முனையில் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் முஸ்லிம், தமிழ் இனங்களுக்கு இரண்டு பிரதேச செயலகம் இயங்குவது நாட்டின் இறையாண்மைக்கும் இன நல்லுறவிற்கும் பாரிய அச்சுறுத்தலாக இருக்கும். 02



## 46 வருடங்களுக்கு பின்னர் அரச விடுதியை கையளித்த முன்னாள் அமைச்சர் பி.தயாரட்ன

திகாமடுல்ல மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான பி.தயாரட்ன அம்பாறையில் உள்ள தமக்கு அரசால் 02

## மஸ்தானின் செயற்பாடுகள் கீழ்த்தரமானவை

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் தெரிவிப்பு!



அரசியலில் நிலைப்பதற்காக மக்களுக்கு வரும் அபிவிருத்திகளைக் கூட தடைசெய்யும் வக்கிர மனநிலையில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் செயற்பட்டதை மறக்க முடியாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் 02

## மஹிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை



### ஜனாதிபதி ஊடகப் பிரிவு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் விளக்கமளித்துள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறித்த ஊடக அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி அலுவலகம் பின்வரும் 02

## பலாலி - அச்சுவேலி பிரதான வீதி திறந்து வைப்பு!

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பணிப்புரையின் பிரகாரம் மூன்று தசாப்தங்களின் பின்னர் பலாலி - அச்சுவேலி பிரதான வீதி நேற்று (01) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முப்பது வருடகால யுத்தம் காரணமாக இந்த பிரதான வீதி மூடப்பட்டதுடன், யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை இந்த வீதி பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்படவில்லை. 02






## தேசிய மக்கள் சக்தி.......

யாழ்ப்பாணத்தில் (31) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

முன்னர் புதிய அரசுகள் பதவி வகுக்கும் போது அவர்களுடன் இணையக்கூடாது என்று பலரும் நினைத்த காலங்கள் உண்டு. அது கட்சியின் நிலைப்பாடு அல்ல.. ஆனால் எனது தனிப்பட்ட கருத்து அவர்களுடன் இணைவதில் எவ்வித பிரச்சினையையும் நான் கண்டதில்லை. நல்லவற்றினை நாம் வரவேற்க வேண்டும்.

சந்திரசேகரனின் விளக்கம் பற்றி நான் ஏன் வீணாக அலட்டிக் கொள்ள வேண்டும்? அநுர குமார திசாநாயக்கவு-டன் ஆறு வருடங்களுக்கு முன்னர் நான் மே தினமன்று யாழ்பாணத்தில் சிவப்பு சட்டை அணிந்து நடந்த படம் இருக்கிறது.. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் காலியில் இருந்து கொழும்புக்கு நடை பாதையாக பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் நடந்து வந்த படமும் இருக்கின்றது. ஆகவே மக்கள் உரிமைகளுக்காக தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கங்களுக்காக பலவிடயங்களில் நாங்கள் சேர்ந்து பயணித்த காலங்கள் நிறையே இருக்குது.

அதற்காக அமைச்சுப்பதவிகளை குறிவைப்பதோ ஓடிச்சென்று பக்கத்தில் நின்று படம் எடுக்கும் செயற்பாடுகளிலோ நாங்கள் ஈடுபடுவதில்லை. நாங்கள் ஈடுபடுவதாக இருந்தால் ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு நாங்கள் சேர்ந்து பயணிப்போம். பதவிகளுக்காகவோ கதிரைகளுக்காகவோ எங்கள் கட்சி இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாது. இது சந்திரசேகரனுக்கு தெரியாவிட்டால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது.

## சட்டவிரோத கல்முனை....

இந்த பிரதேச செயலகத்தின் பிரச்சினை-யை உடனடியாக நிவர்த்தி செய்து பிரதேச செயலகத்தினை ஒரே ஒரு பிரதேச செயலகமாக மாற்றி தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் என திகாமடுல்ல மாவட்டத்தின் சுயேட்சைக்குழு 21 இல் போட்டியிடும் செயற்பாட்டாளர் நியாஸ் தெரிவித்தார்.

திகாமடுல்ல மாவட்டத்தின் சுயேட்சைக் குழு-21 இல் கோடாரி சின்னத்தில் இளம் தொழிலதிபர் டி.எம்.எம் ஹினாஸ் தலைமையில் கல்முனை செயிலான் வீதியில் அமைந்துள்ள சுயேட்சைக் குழுவின் தேர்தல் காரியாலயத்தில் வியாழக்கிழமை (31) இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலம் தனது கருத்தில் தெரிவித்ததாவது

இளைஞர்கள் ஒன்று சேர்ந்து திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு ஒன்றினை தெரிவு செய்து தேர்தலில் களமிறங்கியுள்ளோம். தேர்தலில் சுயேட்சைக் குழுக்கள் பல்வேறு நோக்கங்களுக்காக களமிறக்கப்பட்ட போதிலும் எமது 10 அங்கத்தவர்களை கொண்ட இளைஞர்கள் சுமார் ஆயிரக்கணக்கான வாக்குகளை கொண்டவர்கள் என்பதை வெளிப்படுத்துவதன் ஊடாக எங்களுக்கு நடந்த அநீதிகளையும் துரோகத்தையும் முறியடிக்கும் விதமாக ஒன்று சேர்ந்திருக்கின்றோம். இதற்காக எமது சுயேட்சை குழு -21 க்கு வாக்களிப்பதன் ஊடாக எம்மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு எம்மால் தீர்வுகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

பாராளுமன்ற ஆசனம் ஒன்றினை நாங்கள் பெறுவதென்றால் சுமார் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வாக்குகளை பெற வேண்டும். அந்த வாக்குகளை இறைவன் எங்களுக்கு தந்தால் நாங்களும் ஒரு ஆசனத்தை பெறக் கூடிய வாய்ப்பு இருக்கும்.
தற்போதைய தேர்தல் களம் அவ்வாறில்லை.எமது பிரதிநிதித்துவம் எமது வாக்கு பிரிந்து செல்லக்கூடிய நிலை தான் இருக்கின்றது. இதனால் நாங்கள் ஒரு முக்கியமான தீர்மானம் ஒன்றினை எடுப்பதற்கு கூடி இருக்கின்றோம். 8 அம்சக் கோரிக்கையை முன்வைத்து எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் நாங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் தேசிய மக்கள் சக்தி சார்பாக ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகி உள்ளார். அவர் பாராளுமன்றத்தில் அதிக ஆசனம் பெற வேண்டும் என்பதற்காக நாங்கள் ஒரு முடிவினை எடுத்துள்ளோம். அதன்படி எமது சுயேட்சைக்குழு 21 ஆனது 8 அம்சக் கோரிக்கைகளை அவர்களிடம் முன்வைத்துள்ளது.

எமது 8 அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி நாங்கள் தேசிய மக்கள் சக்தியை கல்முனை தொகுதியில் வெற்றி பெற வைக்க முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த 8 அம்சக் கோரிக்கையில் முதலாவது கோரிக்கையாக கல்முனை சட்டவிரோத செயலக விவகாரம். அதாவது கல்முனை முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் இணைந்து வாழும் பகுதியாகும். இந்த பிரதேசத்தில் முஸ்லிம்கள் தான் பெரும்பான்மையான வாழ்கின்றார்கள். தமிழர்கள் சிறுபான்மையாகவும் வாழ்வதுடன் இரு இனமும் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள்.

இவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நிலையில் முஸ்லிம், தமிழ் ஆகிய இனங்களுக்கு இரண்டு பிரதேச செயலகம் இயங்குவது நாட்டின் இறையாண்மைக்கும் இன நல்லுறவிற்கும் பாரிய அச்சுறுத்தலாக இருக்கும்.

எனவே இவ்வாறான நிலைமைகளை இல்லாமல் செய்து நாட்டின் ஜனாதிபதி இனம் மதம் ஊழல் ஒரு இனத்திற்கு என்று பிரதேச செயலகம் ஒரு சமூகத்திற்கு என்று பிரதேச செயலகம் இல்லாமல் இந்த பிரதேச செயலகத்தின் பிரச்சினையை உடனடியாக நிவர்த்தி செய்து பிரதேச செயலகத்தினை ஒரே ஒரு பிரதேச செயலகமாக மாற்றி தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.இந்த கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என நம்புகின்றோம் என குறிப்பிட்டனர்.

மேலும் கல்முனை பிரதேச செயலகம் மாநகர சபை மற்றும் கல்முனை பொதுச்சந்தை ஆகியன உள்ளிட்ட 8 அம்சக் கோரிக்கைகள் எம்மால் முன்வைக்கபட்டு தேசிய மக்கள் சக்தியினரிடம் இரவு கையளிக்கப்படும். அத்துடன் இவை சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டால் தேசிய மக்கள் சக்திக்கு அதாவது திசைகாட்டிக்கே எமது முழு ஆதரவும் வழங்கப்படும் என திகாமடுல்ல மாவட்டத்தின் சுயேட்சைக்குழு 21 இல் போட்டியிடும் செயற்பாட்டாளர் நியாஸ் மேலும் குறிப்பிட்டார்.

## மஸ்தானின் செயற்பாடுகள்.......

வன்னி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார், தாராபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் முன்னாள் எம்.பி.க்கள் 80 பேர் போட்டியிடவில்லை. வெல்ல முடியாது எனக் கருதியே இவர்கள் ஒதுங்கியுள்ளனர். அதேபோன்று, போட்டியிடும் இன்னும் சிலரை மக்கள் இம்முறை தோற்கடிக்கவும் தீர்மானித்துள்ளனர்.

அரசியலில் நிலைப்பதற்காக வக்கிரபுத்தியுடன் செயற்படும் மஸ்தான் போன்றவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். தாராபுரம் மண்ணின் பெருமைக்கே இழுக்கு ஏற்படும் வகையில், இவரது செயற்பாடுகள் இருந்தன. எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை சிறையிலடைப்பதற்கு, கோட்டாவின் இனவாத எம்.பி.க்களுடன் சேர்ந்து மஸ்தானும் ஒப்பமிட்டார். நான், சிறையிலிருந்தபோது, எனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா என அடிக்கடி சோதனையிட்டனர். இறைவனின் நாட்டத்தால் என்னை கொரோனா தொற்றவில்லை. இல்லாவிட்டால், என்னை எங்கோ இழுத்துக்கொண்டு தொலைத்துவிடவே ராஜபக்'க்களுடன் சேர்ந்து இனவாதிகள் முயற்சித்தனர். இதற்கு உடந்தையாகச் செயற்பட்டவர்தான் இந்த மஸ்தான்.

நமது பிள்ளைகள் படிப்பதற்காக பாடசாலைகளுக்கு பல கட்டடங்களை கொண்டுவந்த வேளை, ரணிலின் செயலாளரிடம் சென்று, அந்தக் கட்டடங்களைக் கட்டவிடாமல் தடை விதித்தார். இந்த அபிவிருத்திகள் இங்கு நடந்தால், ரி'ாட்டின் அரசியல் பலமடையும் எனப் பயந்தவர்தான் இவர். அரசியலுக்காக பிள்ளைகளுக்கு வரும் அபிவிருத்திகளை தடுத்துவிடாதீர்கள். இயலுமானால், நீங்களும் பாடசாலைகளுக்கான அபிவிருத்தியைக் கொண்டுவாருங்கள் என ரணிலின் செயலாளர், அவருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இவற்றையெல்லாம் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதனாலேயே கூறுகின்றேன் என்றார்.

## 46 வருடங்களுக்கு பின்னர்.......

வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதியை 46 ஆண்டுகளின் பின்னர் அரசிடம் கையளித்துள்ளார்.

அம்பாறை திககாமினி வீதியில் அமைந்துள்ள அரசின் இந்த பங்களாவினை அம்பாறை அரச அதிபரிடம் வியாழக்கிழமை (31) கையளித்துள்ளதாக அம்பாறை அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இவர் அமைச்சராக இருந்த காலப்பகுதியான 1977 முதல் 1994 வரையான காலப்பகுதியில் இந்த அரச விடுதி அவரது அம்பாறை வாசஸ்தலமாகவும் அலுவலகமாகவும் இயங்கி வந்தது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கத்தில் சக்தி வாய்ந்த அமைச்சுப் பதவிகளை வகித்த இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்று தற்போது வயது முதுமையால் கொழும்பில் உள்ள அவரது வீட்டில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது

## மஹிந்த ராஜபக்ஸவின்......

பலன்களை அவருக்கு வழங்கியுள்ளதா-கவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவிக்கின்றது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, ஓய்வு பெற்ற ஜனாதிபதி ஒருவரின் ஓய்வூதியத்தை பெறுவதோடு, கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தையும் செயலாளருக்கான கொடுப்பனவையும் அவர் பெறுகின்றார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கு 03 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன்,

Mercedes Benz -600 May Batch (B/P) Car 2008, Toyota Land Cruiser – 2017, Mercedes Benz – G63 AMG 4×4, 2850 Jeep 2013 ஆகிய 3 வாகனங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதற்காக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 1950 லீற்றர் வழங்கப்படுவதுடன், அந்த வாகனங்களுக்காக மூன்று சாரதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கு பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அதற்காக தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவம் மற்றும் கடற்படை வீரர்களுக்கு மேலதிகமாக 29 பொலிஸ் சாரதிகள் உள்ளிட்ட 180 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்கு தற்போது அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் அது தொடர்பான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பலாலி - அச்சுவேலி......

இந்த வீதியை திறப்பது தொடர்பில் வட மாகாண மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்த நிலையில் கடந்த ஒக்டோபர் 22 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விற்கும் ஆளுநர்களுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகமும் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி, இந்த வீதியை திறப்பது தொடர்பிலுள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்திருந்ததோடு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலையீட்டின் பேரில் பலாலி - அச்சுவேலி பிரதான வீதியை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நம்பகமான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# குண்டு வெடிப்பில் 5 பாடசாலை மாணவர்கள் உட்பட 7 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 5 பாடசாலை மாணவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர். சம்பவம் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள மஸ்தங் மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் பாடசாலை மாணவர்கள் எனவும் குண்டு வெடிப்பில் ஒரு பொலிஸ் வாகனம் மற்றும் சில முச்சக்கரவண்டிகளும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த குண்டுவெடிப்பிற்கு காரணமானவர்கள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



## திகாமடுல்ல மாவட்டத்தில் சிறுபான்மை பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுமா?

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொது தேர்தலில் அதிகளவான சுயேச்சை குழுக்களும் கட்சிகளும் போட்டியில் களமிறக்கப்பட்டுள்ளது. இது சிறுபான்மை சமூகத்தின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கான ஒரு செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் அம்பரை தொகுதியில் 188222, சம்மாந்துறை தொகுதியில் 99727, கல்முனை தொகுதியில் 82860, பொத்துவில் தொகுதியில் 184653 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இத்தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 14 அரசியல் கட்சிகளும் 50 சுயேட்சை குழுக்களும் களம் இறக்கப்பட்டுள்ளன. இதில் அதிகளவான கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் போட்டியிட்டாலும் பெரும்பாலான சுயேட்சை குழுக்கள் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை மையமாக வைத்தே களமிறக்கப் பட்டுள்ளன. எனினும் அம்பாரை தொகுதியில் அதிகளவான சுயேட்சை குழுக்கள் போட்டியிடாத நிலையே காணப்படுகின்றன.

இதனை அவதானிக்கும் போது சிறுபான்மை மக்களின் வாக்குகள் சிதறிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்திலிருந்து பாராளுமன்றம் செல்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

குறிப்பாக நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் சிறுபான்மை சமூகம் மிகவும் நிதானமாக சிந்தித்து வாக்களிப்பதன் மூலம் தமக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்ள முடியும்.

editorml21@gmail.com

## நாய்களை வாக்கிங் அழைத்து சென்று கனடாவில் கின்னஸ் சாதனை




கனடாவை சேர்ந்த விலங்குகள் நல ஆர்வலர் மிட்செல் ரூடி என்பவர் ஒரே சமயத்தில் 38 நாய்களை சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் வரை வாக்கிங் அழைத்து சென்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

கனடாவை சேர்ந்த போங்க் (BONK) மற்றும் கொரிய கே9 ஆர் அமைப்பு (KK9R) இணைந்து, இறைச்சிக்காக நாய்கள் கொல்லப்படுவதை தடுக்கவும், மீட்கப்படும் பப்பிகளை பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் வகையிலும், கடந்த செப். 5ஆம் திகதி, தென்கொரியாவில் உள்ள கோசன் நகரில், கின்னஸ் சாதனை நிகழ்வை நடத்தியது. இதில் கனடாவை சேர்ந்த மிட்செல் ரூடி என்பவர் ஒரே சமயத்தில் 38 தெருநாய்களை கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தூரம் வரை வாக்கிங் அழைத்து சென்றுள்ளார். இதற்கு முன்பு 36 நாய்களுடன் வாக்கிங் சென்றதே சாதனையாக இருந்தது. இதை முறியடித்த பெருமைக்கு சொந்தக்காரரான மிட்செல் ரூடி தன்னுடன் வாக்கிங் வந்த நாய்கள் அனைத்தும் நல்ல உடல் திறன் கொண்டவை என்கிறார். இந்நாய்களை பொதுமக்கள் தத்தெடுக்கலாமென கே.கே9. ஆர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இணையத்தில் வைரலாகி வரும் இவரின் வீடியோவை பார்த்து இது அல்லவோ சாதனை என பலரும் புகழ்ந்து வருகின்றனர்.

## வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 205 ஆக உயர்வு



ஸ்பெயினில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 205 பேர் உயிரிழந்துள்ளனர். ஸ்பெயின் நாட்டின் வெலன்சியா மாகாணத்தில் கடந்த புதன்கிழமை திடீரென கடும்மழை பெய்தது. இதனால் பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடும்மழை காரணமாக ஆறுகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 205 ஆக அதிகரித்துள்ளதுடன் 100இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். மேலும், மழை காரணமாக பல பகுதிகளில் மண்சரிவும் ஏற்பட்டது. வீடுகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ள நிலையில் மீட்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மீட்பு பணியில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



## கமலா ஹரிஸுக்கு ஆதரவாக இணைந்த அமெரிக்க பிரபலங்கள்

எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹரிஸுக்கு மார்வெல்லின் அவஞ்சர்ஸ் பட நடிகர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளதால், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹரிஸும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

கமலா ஹரிஸுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த பிரபலங்கள் மற்றும் தொழில் அதிபர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.




## அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரிப்பு





**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தின் அண்மைக்காலமாக பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், இது தொடர்பில் பொதுமக்கள் அவமானமாக இருக்குமாறும் பொலிஸாரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக வீடு உடைத்து நகை, பணம் திருடுதல் மற்றும் மோட்டார் சைக்கிள் காணாமல் சென்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

குறித்த சட்டவிரோத சம்பவங்களில் வீடுகள் உடைத்து திருடும் சம்பவம் நள்ளிரவு 1:00 மணிக்கும் அதிகாலை 4:30 மணிக்கும் இடையில் இடம்பெற்று வருவதுடன் வீட்டின் ஜன்னல் கிறில் மற்றும் ஓடுகள் பிரிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது இடம் பெறுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தவிர மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் சம காலங்களில் பல்வேறு பொலிஸ் நிலைய பகுதிகளிலும் அதிகரித்துள்ளன. பெரும்பாலும் பொது இடங்களில் தரித்து வைக்கப்பட்ட நிலையிலும் வயல் வேலை காரணமாக வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டியில் வைத்து விட்டு செல்லும் பொருட்கள் உள்ளிட்டவைகள் திருடப்பட்டு வருகின்றன.

மேலும் சில பொலிஸ் பிரிவுகளில் வைத்தியசாலை, பொதுச்சந்தை, நகரப் பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளமை சிசிடிவி காணொளிகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் பகல் நேரத்திலோ, இரவு நேரத்திலோ தேவையற்ற முறையில் சந்தேகத்திற்கிடமாக மாஸ்க் மற்றும் தொப்பி அல்லது தலைக்கவசம் அணிந்து நடமாடுபவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சட்டவிரோத செயற்பாடுகள் சம்பந்தமாக அவதானமாக இருப்பதுடன் சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல் ஏதேனும் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தெரியப்படுத்தமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## இடிமின்னல் தாக்குதலில் குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயான்குடா வயற்பிரதேசத்தில் ஏற்பட்ட இடிமின்னல் தாக்குதலில் குடும்பஸ்தரான கூலித் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு சத்துரகொண்டான் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் என்பவரே பலியானவரென கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர் .

காயன்குடா வயலில் வரம்பு கட்டிக் கொண்டிருந்த வேளை மழை பெய்யாத சமயம் திடீரென ஏற்பட்ட இடிமின்னலில் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை பார்வையிட்டு முதற்கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## மேலைத்தேய வாத்திய இசை போட்டியில் கல்முனை பாடசாலைகள் சாதனை






**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை வலய மட்டத்தில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண் மற்றும் பெண் மாணவ மேலைத்தேய வாத்திய இசைக்குழு போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி (தேசிய பாடசாலை) முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியானது கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் சிறப்பாக ஒழுகுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டியின் மூன்றாம் இடத்தை கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயம் தனதாக்கி கொண்டது.

## சோழன் உலக சாதனையாளராக சிறுவன் முகமட் அக்லான் பிலால் தெரிவு




**(எம்.ஏ.முகமட்)**

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் மற்றும் கிண்ணியா மத்திய கல்லூரி இணைந்து நடாத்திய சோழன் உலக சாதனை படைக்கும் நிகழ்வு கிண்ணியா மத்திய கல்லூரியில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் தலைவர் கதிரவன் த.இன்பராசா தலைமையில் நடை பெற்றது..

சோழன் உலக சாதனை படைக்கும் நிகழ்ச்சியில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த 4 வயதையுடைய சிறுவன் நஸ்மி முகமட் அக்லான் பிலால் சோழன் உலக சாதனையாளனாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

இச் சிறுவன் கணித அடுக்குகளின் கணித விதி முறையில் பத்தின் அடுக்குகளை அவற்றின் நூறாம் அடுக்குகள் வரை 2 நிமிடம் 39 செக்கன்களிலும், மிகப் பெரிய எண்களை இலகுவாக ஆங்கில மொழியில் கூறி 4 நிமிடம் 56 செக்கன்களிலும் சோழன் உலக சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இச்சாதனை செய்தமைக்காக மேற்படி குறித்த நிறுவனத்தினால் சான்றிதழ்,கேடயம் மற்றும் அடையாள அட்டை வழங்கி குறித்த சிறுவன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தலைவர் எம்.தனராஜ், மட்டு மாவட்ட பொதுச் செயலாளர் சிவ. வரதகரன், செயற்குழு உறுப்பினர் எம். எச்.எம்.பர்சான், திருகோணமலை மாவட்ட பொதுச் செயலாளர் சுந்தர் விக்னேஸ்வரராஜா, ஆகியோர் சோழன் உலக சாதனை புத்தகத்தின் சிறப்பு நடுவர்களாகவும் கலந்து கொண்டனர்.

கிண்ணியா வலயக் கல்விப்பணிப்பாளர் இஸட்.எம். முனவ்வரா நளீம் கிண்ணியா மத்திய கல்லூரி அதிபர்எம்.எச்.எம்.நஜாத், தாய் சேய் நல வைத்தியதிகாரி ஏ.எச்.எம்.சமீம், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்தியதிகாரி ஏ.எம்.எம்.அஜீத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவரின் பெற்றோர் கந்தளாய் வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் நஸார் முஹமட் நஸ்மி மற்றும் கிண்ணியா வைத்தியசாலையில் கடமையாற்றும் இயன் மருத்துவர் அஸ்ரப் பாத்திமா பஸீஹா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு முஸ்லிம் இனச்சுத்திகரிப்பின் 34ஆவது வருட நினைவு கூறல்





(பாறுக் ஷிஹான்)

வடக்கு முஸ்லிம் மக்கள் வெளியேற்றத்தின் 34ஆவது வருட நினைவு கூறல் நிகழ்வு யாழ்ப்பாணம் முஸ்லிம் கலாசார சபையின் ஏற்பாட்டில் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

கதை சொல்லும் நிகழ்வு எனும் தலைப்பில் முஸ்லிம் கலாசார சபையின் தலைவர் ஏ.சி.நைசர் தலைமையில் இனச்சுத்திகரிப்பிலிருந்து மீளெழுவோம் - வடக்கு முஸ்லிம் மக்கள் என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற மேற்படி இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகவும், பிரதம பேச்சாளர்களாகவும் பி.எஸ்.எம்.சரபுல் அனாம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.திருவரங்கன் மற்றும் மௌலவி எம்.ஏ.பைசர் மதனி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸ் மற்றும் யாழ் கதீஜா மகா வித்தியாலய அதிபர் ஏ.சி.ஜென்சி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். 1990.10.30 ஆம் திகதி வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது இடம்பெற்ற நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களை கதை வடிவில் இளம் தலைமுறையினருக்கு சொல்லிக் கொடுக்கும் வகையில் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றது.

விருந்தினர்களின் உரைகள் ஒவ்வொன்றும் வெளியேற்றத்தின் சம்பவங்கள், மக்களின் இழப்புக்கள், அகதி வாழ்க்கையின் அவலங்கள், மீள்குடியேற்றத்தின் சவால்கள், முஸ்லிம் சமூகம் தாமாக இனச்சுத்திகரிப்பிலிருந்து மீளெழுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகளை தொடர்ந்தும் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணம் முஸ்லிம் இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்கள், யாழ் முஸ்லிம் ஒன்றியத்தின் பிரதிநிதி ஜனாப் ஆரிப், பொதுமக்கள் மற்றும் யாழ்ப்பாணம் முஸ்லிம் கலாசார சபையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

# கல்முனையில் இன நல்லிணக்க விளையாட்டு விழா



(எமது செய்தியாளர்)

மாணவர்களிடத்தில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டிலும் டயக்கோனியா அமைப்பின் ஆதரவிலும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி. எம்.றிசாத் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு விழா கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர்.இஸ்ஸதீன், கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்ரிஸ், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிறைவேற்று பணிப்பாளர் எயன் ஜப்பார், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் லைலா உடையார், நிதி உத்தியோகத்தர் குமுது பெரேரா, கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஏழு பாடசாலைகளின் அதிபர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என மேலும் பலர் கலந்து கொண்டனர்.

இவ் விளையாட்டு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கு நினைவுச் சின்னங்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

# கல்முனை கார்மேல் பற்றிமா 2007 அணியினர் உதயம்




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் பிரபல்யமான கார்மேல் பற்றிமா கல்லூரியில் 2004 **O/L** மற்றும் 2007 **A/L** மாணவர்களின் ஒன்று கூடலானது 20 வருடங்களின் பின் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வுகள் பாடசாலை முன்றலில் நடைபெற்றது . அதன் பின்னர் அனைத்து நிகழ்வுகளும் பெரியநீலாவணை தனியார் விடுதி மண்டபத்தில் இடம்பெற்றது . இதன் போது கடந்த கால பாடசாலை நினைவுகளை மீட்டுப் பார்க்கும் நேரமாகவும் அமைந்தது.

இதன்போது மறைந்த ஆசிரியர்கள் மற்றும் இவர்களோடு கல்வி கற்று மறைந்த நியோன் மற்றும் ரிப்னாஸ் நினைவாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன் பின்னர் ஒரு கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் நோக்கில் ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பும் உருவாக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பாடசாலை மற்றும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் சிறப்பாக ஈடுபட உள்ளதாக முடிவெடுக்கப்பட்டது.
புதிய நிருவாக சபை தெரிவு செய்யப்பட்டது அதன் படி

தலைவர்- சிந்துஜன்,
செயலாளர்-சுரேஸ்,
பொருளாளர்-ரசிதரன்,
உப தலைவர்-தரணிதரன்,
உப செயலாளர்-டனிஸ்கரன்,
கணக்காய்வாளர்-குவைஸ்
கொழும்பு இணைப்பாளர்களாக-ரவுஷான், அஸ்ரப்,
மத்திய கிழக்கு இணைப்பாளர்கள்-நப்றிஸ், அண்டனி வெளிநாட்டு இணைப்பாளர்கள்- குமுதன், சசி
நிர்வாக குழு உறுப்பினர்கள் - நிகாசன், நிரூசன், இர்ஷாத், பிரசாத், ஜீவன் ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# மூதூர் -மல்லிகைத்தீவு மக்கள் யானை பாதுகாப்புவேலி அமைத்துத் தருமாறு கோரிக்கை

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள மல்லிகைத்தீவு கிராமத்திற்குள் (31) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் அட்டகாசத்தில் ஈடுபட்டு அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது பயன்தரும் வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக கிராமத்திற்குள் காட்டு யானைகள் புகுந்து சேதம் விளைவிப்பதால் தமது பயிர்கள் சேதமடைவதாகவும், இரவு வேளைகளில் வீட்டில் உறங்குவதற்கும் அச்சமாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



இது விடயத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு யானை பாதுகாப்புவேலி அமைத்துத்தர வேண்டுமென மூதூர் -மல்லிகைத்தீவு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.